Registered as a News Paper in Ceylon
P M G No. H A 59/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருஷ
( 1889 )
ஆவணி மாதம்
28 க உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கரஞு புரட்டாதிமீ கஉ உ வெள்ளிக்கிழமை (28 செப்டெம்பர் 1951) [இல. - ௪௮]

## வீரம்

வீரம் யாரும் மெச்சத்தக்க குணங்களிலொன்று. தேக பலத்தினாலும் மனோபலத்தினாலும் அதைக் காட்டலாம். ஆனால் மனோபலமே எவ்வித வீரச்செய்கைக்கும் இன்றியமையாதது. முற்காலத்திற் சண்டையில் வெற்றியடைந்த அரசர்கள் வீரம்படைத்தவர்களென்று கூறப்பட்டனர். இவர்களுடைய சேனையின் வலிமையே அவ்வெற்றிக்கு அடிப்படையாக இருந்தது. ஆடவர், பெண்டிர் என்பவர்களுடைய வீரத்தைப்பற்றிப் பல நூல்களிற் கூறியிருப்பதைப் பார்த்திருக்கிறோம். வீரத் தாய்மார் தங்கள் பிள்ளைகளைச் சண்டைக்குப் போகும்படி விட்டனராம். முதுகிற் காயமடைந்தவன் கோழை நெஞ்சனென்றும் மார்பிற் காயமடைந்தவன் வீரன் என்றும் சொல்வது அப்பெண்களின் இயல்பு. அவ்வாறு வீரம் வாய்ந்தோன் வீர சுவர்க்கம் செல்வானென்பதும் பழைய கொள்கையாம்.

வீரம் எத்தன்மையது என்று ஊன்றி ஆராயுங்கால், தேகபலத்தினாற் செய்யும் வீரச்செய்கை உண்மையான வீரச்செய்கை யல்ல. வேறெது வீரச் செய்கை? ஒருவர் தன் வாழ்க்கையில் ஒரு இலட்சியம் அல்லது ஒரு நோக்கு உடையரென்று வைத்துக் கொள்வோம். அவர் தன் முன்னே, வைத்திருக்கும் இலட்சியத்தை படையமுன் பல பல தடைகள் இடர்ப்பாடுகள் நேர்வதுண்டு. அவைகளால் மோதுண்டு பின்வாங்குபவர் சிலர். சிறிதுகாலம் எதிர்த்து இனி முன்னேறுவது இயலாது என்று களைப்புற்று விடுபவர் சிலர். மனத் தளர்ச்சி யுற்றவிடத்தும் சிறிது சிறிது இளைப்பாறி நினைத்த காரியத்தை முடிக்க வல்லமையும் மனோதிடமுமுள்ளவரே உண்மையான வீரம் படைத்தவராவர். உதாரணமாக ஒரு வாலிபன் சோதனை ஒன்றுக்கு ஆயத்தஞ் செய்கிறானென்று எடுத்துக்கொள்வோம். இவன் சோதனை எடுத்துச் சித்தியடைய வேண்டுமென்பதுதான் இவனுடைய நோக்கமாகும். குறித்த சோதனை எடுக்குங் காலத்திற்குமுன் பல இடையூறுகள் வருதலுமுண்டு; நோய் வந்து சிறிதுகாலம் தேகசௌக்கியம் குறையக்கூடும். பணக் கஷ்டம் ஏற்படக் கூடும், குடும்பத்திற் சிலர் இறக்கக்கூடும். மனக்குழப்பமடையக்கூடிய சந்தர்ப்பங்கள் வருதலுமுண்டு. இவைகளெல்லாவற்றையும் விலக்கி மனத்தை ஒருநிலைப்படுத்தி அச்சோதனை எடுத்துச் சித்தி எய்தல் ஒரு சிறந்த வீரச்செயலாம்.

காந்தியடிகளின் வீரம் ஒப்பற்ற தனிப்பெருமை வாய்ந்தது. இந்தியாவிற்குச் சுதந்திரம் பெறவேண்டுமென்பதே அவருடைய திவ்விய நோக்கமாகும். அவர் அதைப் பெறுவதற்கு முன் நேர்ந்த இடைப்பாடுகள் ஒன்றல்ல; பலவுள. சிறைச்சாலை செல்லவும் சட்ட மறுப்பு இயக்கம் தொடங்கியதால் அவன்டாய பல கஷ்டங்களும் இன்னும் பலவிதமான தடைகளும் ஏற்பட்டன என்பது யாவருமறிந்த விஷயம். ஆனால்,

"வீரசுதந்திரம் வேண்டிநின்றார்
பின்னர்
வேறொன்று கொள்வாரோ—
என்றும்
ஆரமு துண்ணுதற் காசை
கொண்டார் கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ"

என்ற பாரதியார் பாடலுக்கிணங்க, பூரண சுதந்திரம் பெறவேண்டுமென்ற எண்ணத்தைப் பூர்த்திசெய்தார். அமுதுண்ண விருப்பங் கொண்ட பெரியாரெவரும் இழிவான கள்ளில் விருப்பம் ஒருகாலும் கொள்ளமாட்டார். ஒரு குறிக்கோள் மனத்திலே கொண்டோர் அதைப் பெறும்வரையிலும் வேறொன்றிலும் மனஞ்செல்ல விடமாட்டார். அப்படிச் செல்லும் தன்மையுடைய மனத்தையும் சிறிது நேரத்துள் இழுத்துத் தம்வசப்படுத்திக்கொள்வார். மகாத்மா காந்தியின் வீரம் வியக்கத்தக்கதும் பலரும் பின்பற்ற வேண்டியதுமாகும். இவ்விதம் வீரம்படைத்த பெரியாரே அழியாப்புகழை நிலைநாட்டினர்.

**மு. இளையதம்பி**
**ஆசிரியர் உரும்பராய்**

ஆனால் இத்தன்மைய வீரத்தையும் நன்முயற்சி செய்யும் வழியிலேயே செலுத்த வேண்டும். தீய வழிகளில் மனதைச் செலுத்தி, ஒரு காரியத்தைச் செய்வது வீரமல்ல. ஒருவன் தனக்கும் உலகத்திற்கும் நன்மை பயக்கக்கூடிய காரியத்தைச் செய்வதே வீரமாகும்.

பெண்களுள்ளும் வீரபத்தினிகள் இருந்திருக்கிறார்கள். சந்திரவதி, துரோபதை, சாவித்திரி முதலியோர் உண்மையான வீரம் படைத்த கற்புடை மங்கையராவர்.

"வானம் பிழையாது
வளம்பிழைப் பறியாது
நீணில வேந்தர்
கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர்
இருந்தநாடு"

என்று இளங்கோவடிகள் கூறிய வண்ணம் கற்பை வீரத்தோடு காப்பாற்றிவரும் நாடு செழிப்படையும் என்பது திண்ணம். இங்கே குறிப்பிட்ட வீரபத்தினிகள் போன்ற பெண்கள் இன்றும் இருக்கலாம், என்றும் இருக்கலாம். அன்னோர் வீரம் மெச்சத்தக்கதே.

வீரமுடையோர்தாமும் சிற்சில தருணங்களில் வீரத்தை இழந்துவிடுகிறார்கள் 'கூரம்பாயினும் வீரியம் பேசேல்' என்ற ஆன்றோர் வாக்கின்படி, மனவலிமையுடையோரும் எப்போதும் சாமர்த்தியமுடையோரென்றெண்ணுதல் இழுக்கு. காமம், கோபம், வெறுப்பு, விருப்பு முதலியன மனத்திற்கியல்பாய குணங்களானபடியால், அவைகள் வீரத்தை யழிக்கக்கூடும். அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறுவதற்காகக் கடுந் தவமியற்றினான். அத்தவத்தை அழிப்பதற்காக தேவகன்னியரான மேனகை, ஊர்வசி, திலோத்தமை, அரம்பை ஆதியோர் இந்திரன் ஏவலால் அருச்சுனன் முன்னிலையில் வந்தபோதும் அவன் மனநிலை மாறாது நின்றது. இந்திரன் தானாக அவன்முன் தோன்றியும் அவனது தவத்தை அழிக்க முடியவில்லை. அவன் ஈற்றிற் பாசுபதாஸ்திரம் பெற்றான். இதுவே வீரம்.

மகாத்மா காந்தி பலநாள் உண்ணாவிரதஞ் செய்தார். மக்களுள் எத்தனை பேர் அப்படிச் செய்யமுடியும்? மேனிலையுற்ற பெரியோர்

தொடர்ச்சி 2-ம் பக்கம்

## 'கலைமகள்' ஆசிரியருக்கு வரவேற்பு

சென்ற புரட்டாதி மீ 7-ம் திகதி (23-9-51) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு யாழ்ப்பாணம் - வண்ணைத்திஸ்வா வித்தியாலய மண்டபத்தில் திரு. ச. பேரின்பநாயகன் B. A. தலைமையில் கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதனுக்கு மகத்தான ஒரு வரவேற்பு நடைபெற்றது. அத்தருணம் திரு. ஜகந்நாதன் "திருக்குறளும் காந்தீயமும்" என்னும் விஷயத்தில் சிறந்த ஓர் சொற்பொழிவாற்றினர்

உ

## தோத்திரம்

திருவிருத்தம்
திருச்சிற்றம்பலம்

வெம்மை நமன்றமர் மிக்கு விரவி விழுப்பதன் முன்
இம்மையுன்றாள் என்றன் னெஞ்சத் தெழுதிவை ஈங்கிகழில்
அம்மை யடியேற் கருளுதி யெனபதிங் காரறிவார்
செம்மை தருசத்தி முற்றத்துறையுஞ் சிவக்கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

பொழுதைத் தருகின்ற திருச்சத்தி முற்றமென்னுந் தலத்திற்கோயில் கொண்டருளிய சிவக்கொழுந்தீசுவரரே, வன்கண்மையுடைய யமபட்டர்கள் (நரகத்தில் அடியேனை) வீழ்த்துவதற்குமுந்தியே இப்பிறப்பிற்றானே தேவரீருடைய திருவடிகள் தமியேன் மனத்தில் உறப்பதியும்படி அருள்புரிக, (தமியேனுடைய வேண்டுகோளை) அலட்சியஞ்செய்வீரேல், அடுத்த பிறப்பிலே அடியேனுக்குத் தேவரீர் அனுக்கிரகஞ் செய்வீரென்பதை யாரறிவார்! என்பது சொற்பொருள்.

வீழ்ப்பது விழுப்பதெனநின்றது; இம்மை - இப்பிறவி; உன்றாள் என்னெஞ்சத்தெழுதிவை - தேவரீருடைய திருவடிகளைத் தமியேன் என்றும் மறவா வண்ணம் அருள்புரிக, எந்நேரமுந் தம்முள்ளத்திற் சிவசிந்தனைநிலைநிற்க இறைவனை அருள்புரிதல்வேண்டுமென்பது அப்பர் சுவாமிகள் விண்ணப்பம்; இதனை "புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியா வுன்னடியென்மனத்தே - வழுவாதிருக்க வரந்தரவேண்டும்" என அப்பெரியார் திருப்பாதிரிப்புலியூ ரிறைவனை இரந்தவாறு முணரலாகும். அம்மை - அடுத்த பிறவி. (6)

## கோணேஸ்வர புராதன விக்கிரகங்கள்

### புத்தள வாசிகளின் வரவேற்பு

பாடல்பெற்ற புண்ணிய க்ஷேத்திரமாகிய திருக்கோணமலையிற் கண்டெடுக்கப்பட்ட மூன்று விக்கிரகங்களும் இம்மாதம் 20-ம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிவரை புத்தளநகர் எல்லையில் நகரசபைத் தலைவர் ஜனாப் எஸ். எம். எம். காசிம், உதவி மாகாணத் தலைவர் பிரதிநிதி திரு இ. இராசையா நகரசபை அங்கத்தவர்கள், மேற்படி விக்கிரகங்கள் வரவேற்கும் அதிகார சபையாரால் நன்கு அலங்கரிக்கப்பட்ட பந்தலில் வரவேற்று மின்சார வெளிச்சங்களால் அலங்கரிக்கப்பெற்ற விசித்திர விமானத்தில் ஊர்வலமாய், மேளவாத்தியம் முதலிய வரிசைகளை யானைகள் என்னு மிவைகளுடன் எழுந்தருளச்செய்து ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்குக் கொண்டுபோய் ஆராதனை செய்து தரிசனைக்கு வைத்தனர். திரு க. நடராசா ஐயர் யாவர்க்கும் அன்னதானம் வழங்கினர். அடுத்த நாள் வெள்ளிக்கிழமை இரவு விசேஷ பூசையும், பிரார்த்தனையும் நடைபெற்றன. அதன் பின் நகரத்தாரால் அன்னதானம் வழங்கப்பெற்றது. சனிக்கிழமை பகல் 3 மணிவரை விக்கிரகங்களை வரவேற்பு சபைத்தலைவர்கள் முதலானோர் ஊர்வலமாக அநுராதபுரத்துக்கு எழுந்தருளச் செய்தனர்.

## வலிகாமம் மேற்குத் தமிழாசிரியர் சங்கம்

### சங்கீத விழா

குறிப்பிட்ட விழா 21-9-51, வெள்ளிக்கிழமை மாலை 6 மணிவரை சபைத் தலைவர் திரு. மு. சதாசிவம் தலைமையில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி "ஒட்லி" மண்டபத்தில் நிகழ்வுற்றது. பாலர் பகுதி வித்தியாதரிசினி ஸ்ரீமதி. V. துரைசிங்கம் பரிசில் வழங்கினர்.

திருவாசகம் குறிப்புக்கட்குப் பின் பரிசில்கள் வழங்கப்பெற்றன. பரிசில்கள் பெற்ற வித்தியாசாலைகள்:

நாடகம்: இளவாலை றோ.க. பெண் பாடசாலை; ஆனைக்கோட்டை றோ.க. பாடசாலை; நடனம்: சண்டிருப்பாய் வடக்கு சைவப்பாடசாலை; சில்லாலை றோ. க. பாடசாலை; பிளவத்தை A. M. பாடசாலை; கோலாட்டம்: பொன்னாலை வரதராசப் பெருமான் வித்தியாசாலை; நவாலி றோ.க. பாடசாலை; பாட்டு: கட்டுடை சைவ வித்தியாசாலை; அராலி சரஸ்வதி வித்தியாசாலை; சுதுமலை வடக்குச் சைவப்பாடசாலை; ஆங்கிலம்: வட்டு- திருஞானசம்பந்த வித்தியாசாலை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை; மூளாய் A. M. பாடசாலை.

—கடித.

செல்லும்மார்க்கத்தில் அநேக இடங்களில் பக்தர்கள் கூடி வரவேற்றார்கள். —கடித.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ், கரஹு புரட்டாதி மீ" கஉ வ வெள்ளிக்கிழமை


## நவராத்திரி

தனந்தருங் கல்விதரும் ஒருநாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனஎல்லாந் தரும்அன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபிராமி கடைக்கண்களே.

உலக மாதாவாகிய ஈசுவரியை மக்களாகிய நாம் பய பத்தியோடு வணங்கித் துதித்து எங்கள் பிராட்டியின் இன்னருளைப் பெற்று இடர் போக்கி இனிது ஈடேறுதற்கு வாய்த்த காலம் புரட்டாசி மாசத்துச் சுக்கிலபட்சப் பிரதமை முதல் நவமியீறாகவுள்ள ஒன்பது தினங்களுமாம்; இப்புண்ணிய காலத்திலே தேவியின் திருவருட் பெருக்கு அதிகமாகுமென்பது மேலோர் கொள்கை. இந்த இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் நவராத்திரி (ஒன்பது இரவுகள்) எனச் சொல்லப்படும் இக்காலம் வட இந்தியாவிலே தசரா (பத்து இரவுகள்) என வழங்கும்; இந்த விசேட தினங்களில் இங்கும் தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலுமுள்ள சைவ மக்களெல்லாரும் அன்று தொட்டு இன்றுவரை விசேடபூசை செய்தும் செய்வித்தும் எங்களன்னையை உபாசித்து விரதம் அநுட்டித்து வழிபட்டு உய்தியடைந்து வருகிறார்கள்.

பராசத்தியே துர்க்கையாக வீரத்தையும், சரஸ்வதியாகக் கல்வியையும் இலக்குமியாகச் செல்வத்தையும் அழகையும், உமாதேவியாக ஞானத்தையுந் தந்தருளுவள்; இந் நவராத்திரி வேளையிற் பரமேசுவரி துர்க்கையெனவும், இலக்குமியெனவும் சரசுவதியெனவும் பாவித்துத் தனித்தனி மும்மூன்று இரவிற் பூசிக்கப்படுவள்; இங்ஙனம் பூசிப்போர்க்கு இறைவியருளும் பேறுகள் இன்னின்ன என்பன "தனந்தரும்" என்றற்றொடக்கத்த மேலுள்ள அருட் பாடல் வாயிலாக அறியக்கிடக்கின்றன.

"எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்" என்ற பெரியார் வாக்கின்படி இறைவன் உயிர்கட்கு அநுக்கிரகஞ் செய்ய வேண்டி என்னென்ன திருவடிவங்களைக்கொண்டாரோ, அவற்றிற்கேற்பத் திருவருட் சக்தியாகிய இறைவியும் பலவேறு வடிவங்களைக் கொண்டருளுவள்; மகேசுவரி, மனோன்மணி, சாமுண்டி, வராகி, காளி முதலிய தோற்றங்களும் இறைவிகொண்டுள்ள திருவருள் வடிவங்களாகும்; ஆனதினால் இந்த நவராத்திரி விரத புண்ணிய காலத்திலே நாம் இறைவியை எந்தெந்த வடிவங்களிற் பூசித்து வழிபடுகிறோமோ அந்தந்த வடிவங்கள் வாயிலாக அவள் எமக்குத்தப்பாது அருள் புரிவாள்.

தெய்வவழிபாடும் நம்பிக்கையுங் குன்றத் தலைப்பட்ட இக் காலத்திலே, இந்த இறைவி வழிபாடுங் குன்றிவரலாயிற்று; எங்கள் மூதாதையர் இந்த நவராத்திரி காலத்திலே திருக்கோயில்களிற் சென்று தேவியைத் தரிசித்து வழிபடுவதோடு மாத்திரம் நில்லாது, தங்கள் தங்கள் தூய இல்லங்களிலும் மடாலயம் வித்தியாலயங்களிலும் கும்ப ஸ்தாபனஞ் செய்து இந்த ஒன்பது நாளும் இறைவியைப் பூசித்து வந்தார்கள்; பள்ளிக்கூட மாணக்கருக்கும் இந்நவராத்திரி காலம் தேவியை வழிபடுவதற்கும், இல்லந்தோறுஞ் சென்று சென்று "விருத்தம்" படித்துத்தங்கள் வித்தைத் திறமையைக் காட்டிப் பெற்றோர் உற்றோர் பெரியார் ஆசிரியர் முதலானோரை மகிழச் செய்வதற்கும் ஏற்ற காலமாயிருந்தது; ஆனால் அவைகளெல்லாம் இப்பொழுது இந்நாட்டில் அருகலாயின; இங்கு அருகினாலும், பல்லாற்றானும் புத்துயிர்பெற்று வரும் பரதகண்டமாகிய தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் இந்த மேலான கொள்கைகளும் வழிபாடுஞ் சிறிதேனுங் குறையவில்லையெனலாம். எதனையும் நவமாகச் செய்யவேண்டும், நவமாக மாற்றவேண்டும் நவமாக எழுதவேண்டுமென்னும் நவமான நோக்கங்கொண்ட அன்பர்கள் தாமும் இந்த நவராத்திரி காலத்திலே நவசத்தியை வணங்கி அருள் பெற்று அவற்றைச் செய்யலாகுமே! எங்கள் அபிராமித்தாயை இப்படியான விசேட காலங்களிலும் ஏனைய காலங்களிலுஞ் சிந்தித்து வழிபடுவார்க்கு எவ்வகையான இடையூறும் நேரா என்பதனைப் பின்வருந் திருப்பாசுரம் இனிது விளக்கும்:-

"ஆத்தாளை யெங்கள் அபிராமவல்லியை
அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளைப்
புவியடங்கக்
காத்தாளை அங்குச பாசாங்
குசமுங் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண் ணியைத்
தொழுவார்க்கொருதீங்கில்லையே".

---

காலநிலை

---

சிலதினங்களாக நன்மழைபெய்கின்றது; இன்னும்மழைக்கோலங்காணப்படுகிறது.

## வீரம்

---

1-ம் பக்கத் தொடர்ச்சி

செய்கதை எனையோர் அதுபோன்று திடீரென நடத்தவியலாது. ஆகையால் வாழ்க்கையிற் சிறிது சிறிதாகப் பழகிவருதல் வேண்டும். விவசாயமாக, உத்தியோகமாக, வர்த்தகமாக எத்தொழிலெனினும் அவ்வத் தொழில்களை வீரத்தோடு செய்தல் வேண்டும்.

கல்வியறிவு இல்லாத சிலர் ஆயுதமெடுத்துச் சண்டைசெய்வது வீரமென்று தப்பிதமான எண்ணம் வைத்திருக்கிறார்கள். ஒருவரை ஒருவர் பகை காரணமாக ஆயுதங்கொண்டு போர்செய்வது வீரமல்ல. அது மனப்பயத்தா லேற்படுவது. அது பேதமையின் அறிகுறி. ஆனால் தன்னை எதிர்த்த ஒரு துஷ்ட மிருகத்தைத் தற்பாதுகாப்பின் நிமித்தம் அல்லது தன்னை அடைந்தோரைப் பாதுகாப்பதற்காகப் போர்செய்து வெற்றி பெறுதலும் வீரம் என்று சொல்லலாம்; கிணற்றில், ஆற்றில் அல்லது பெரு வெள்ளத்தில் விழுந்த ஒருவன் உயிர் இழக்குமுன் அவன் உயிரைத் தப்புவித்தலும் வீரச் செய்கையாம். ஒரு இராஜதந்திரி தன் நாட்டை, பகைவன் எதிர்த்தபோது சண்டை இல்லாது தந்திரம், யுக்திமூலம் பாதுகாத்தலும் வீரமாம். ஆராய்ந்து பார்த்தால் ஒரு மனுஷன் தன் வாழ்க்கையில் அனேக வீரச் செயல்களைச் செய்யலாமென்பது புலப்படும்.

## கோணாசலத் திருவுருவங்கள்

---

இத் திருவுருவங்கள் வருகிற திங்கட்கிழமை (1-10-51) பகல் 10 மணிவரை ஊர்வலமாக நவாலி மணிமண்டபத்திற்கு எழுந்தருளச்செய்து, 11 மணிவரையில் விசேட ஆராதனை, பஜனை, பிரசங்கம்முதலியன நடத்தப்பெறுமெனத்தெரிவிக்கப்படுகிறது.

---

## சிறந்த "சினிமா" நடிகர்

---

### P. U. சின்னப்பா காலமானார்

---

சங்கீதத்திலும் நடிப்பிலும்பேர்பெற்ற பட நடிகராகிய திரு P. U. சின்னப்பா, சென்ற சனிக்கிழமை யிரவு (22-9-51) சடுதியிலே சேர்ந்த இருதய நோய்காரணமாகப் புதுக்கோட்டையில் தேகவியோகமாயினர்; வயசு 38; பெற்றோரும் மனைவியும் ஆணும் பெண்ணுமாக இரு பிள்ளைகளுமுளர்.

---

# நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (30-9-51—6-10-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

வாரம் முழுவதும் வெகு முயற்சியோடு கூடியதாகும். எவ்வளவு அவதானமாயிருந்தாலும் சில சங்கடங்கள்நேரக் கூடும். ஆனால் வாரமுடிவில் எல்லாம் நன்மைக்கு வரும். வியாழன் தொடக்கம் சனிக்கிழமைவரை அவதானமாக நடந்துகொள்ளவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

இடையிடையே அற்ப சுகவீனம் நேரக்கூடுமெனினும், இது நன்மைக்காகிய வாரம். உத்தியோகத்தில் சில பிணக்குகள் நேர்ந்தாலும் அவற்றூற் பின் நன்மையுண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

சனசமூக விஷயமாக நல்ல வாரம். ஆண்களாற் பெண்களுக்கும் பெண்களால் ஆண்களுக்கும் லாபமும் உதவியுமுண்டு கிழமை முடிவில் வாகனுதிகளாற் சில இடைஞ்சல் நேரக்கூடும்.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

நன்மைக்கும் அதிக சந்தோஷத்திற்குமுரிய வாரம். சில உரிமைப் பொருள் சேர இடமுண்டு.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

சுற்றமித்திரரோடு பொறுமையாக நடவாவிட்டால் பெரும்மாறுபாடு நேரக்கூடும். கிழமை முழுவதும் அவதானமாக நடந்துகொள்க, புதிய நண்பர்களை நம்பவொண்ணாது. எதும் பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ளவொண்ணாது.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

இவ்வாரத்தில் மனச்சாந்தி யுண்டு. பணநஷ்டம் நேரக்கூடும். நண்பர் தமக்காக எதும் தவறுசெய்யத் தூண்டக்கூடும். அதற்கு இடங்கொடுக்கவொண்ணாது.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

அதிக முயற்சி செய்யவேண்டிய காலம். பிள்ளைகளுக்கு நோய் வரக்கூடும். கிழமை முடிவிலே பொருள்வரவும் சத்துருநாசமுமுண்டு.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பொதுவில் நன்மையான வாரம், சில பிரதான மாறுதல்கள் செய்ய நேரும். புதிய தொடர்புகளால் நன்மையுண்டு.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

செய்யும் முயற்சி சோர்வுறும். ஆனால் பழையமுதலால் இலாபமுண்டு. சில கருமங்களை நிச்சயிப்பதற்குத் தடைகள் நேரக்கூடும்,

**மகராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

இவ்வாரத்திற் பிணக்கவும் சண்டையிடவும் நேரும். இவற்றால் இன்னொருவருடைய தொடர்பு பெலப்படும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2-ம் 3 ம் பாதம்

கிழமையின் முதன் மூன்று நாளும் அவதானமாக நடந்துகொள்க, சிநேகர்களுடன் பிணங்கிச் சண்டையிட நேரும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இந்தக் கிழமையின் முதன் மூன்று நாளும் எதும் பிரதான கருமத்தைச் செய்க. செவ்வாய் மத்தியானந் தொடக்கம் வியாழக்கிழமை வரையில் அவதானமாக நடந்துகொள்க. குடும்பப் பிணக்கும் மனக்கவலையுமுண்டு ஆனால் வாரமுடிவிற் பணவருவாயுண்டு.

# ஆரிய திராவிட பாஷாபி விர்த்திச் சங்கம் பண்டித பரீட்சை 1952—54

க. பாடவகை I: இலக்கியம் i

1. புறநானூறு: 1—100 செய்யுள். 2. அகநானூறு: களிற்றியானை நிரை 1—50 செய்யுள். 3. கலித்தொகை: பாலையும் குறிஞ்சியும். 4 குறுந்தொகை: 1—100 செய்யுள். 5. பரிபாடல்: 1—10 செய்யுள். 6. மதங்கசூளாமணி (விபுலாநந்த அடிகள்)

இலக்கியம் ii. 1. திருக்குறள் பொருட்பால் பரிமேலழகருரையுடன். 2. சீவக சிந்தாமணி — கடவுள்வாழ்த்து முதல் காந்தருவதத்தையார் இலம்பகம் முடிய — நச்சினார்க்கினியருரையுடன். 3. திருக்கோவையார் (உரையுடன்) 4. பெரியபுராணம்—திருநாவுக்கரசுசுவாமிகள் புராணம் 5. சிலப்பதிகாரம்: புகார்க்காண்டம்.

உ. பாடவகை II: இலக்கணம் i.

1. தொல்காப்பியம் — எழுத்ததிகாரம் } வித்துவான்
2. தொல்காப்பியம் — சொல்லதிகாரம் } சி. கணேசையர் பதிப்பு.

இலக்கணம் ii. 1. தொல்காப்பியம் - பொருளதிகாரம்: அகத்திணையியல், புறத்திணையியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல் (வித்துவான் சி. கணேசய்யர் பதிப்பு) 2. இறையனார் களவியலுரை.

ங. பாடவகை III: இலக்கிய வரலாறும் மொழி வரலாறும்.

இவ்வினுப்பத்திரத்தில் 18-ஆம், 19-ஆம் நூற்றாண்டுகளின் சரித்திரம் விரிவாகக் கேட்கப்படும். விசேடமாகச் சிவஞான சுவாமிகள், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, வீரமாமுனிவர், ஆறுமுகநாவலர் என்பவர்களின் மொழியாக்கப்பணிகளை அறிந்திருத்தல் வேண்டும்.

இலக்கிய வரலாற்றுக்குப் பின்வரும் நூல்களின் அறிவு வேண்டப்படும்: 1. திராவிடப் பிரகாசிகை. 2. ஈழநாட்டுத் தமிழ்ப்புலவர் சரித்திரம். 3. Dr. உ. வே. சாமிநாதையர் பதிப்பித்த நூல்களிலுள்ள முகவுரைகளாதியன. 4. பெரியபுராண ஆராய்ச்சி (மா. இராசமாணிக்கம்பிள்ளை.)

மொழிவரலாற்றுக்குப் பின்வரும் நூல்களின் அறிவு வேண்டப்படும்: 1. கால்ட்வெல் ஒப்பிலக்கணம் - முன்னுரைமட்டும். 2. மொழிநூல் (Dr. மு. வரதராசனார்)

ச. பாடவகை IV. பின்வரும் ஆறு (அ—ஊ) பகுதியுள் ஏதாவதொன்றைத் தெரிவு செய்யலாம்.

(அ) சம்ஸ்கிருதம் 1. மார்க்கோபதேசிகை (Sanskrit Ist Book By Bandarkar) 2. ஹிதோபதேசம் மித்திரலாபம் 1—5 (ஆ) ஆங்கிலம்; ஆங்கில S. S. C. வகுப்புக்குரிய ஆங்கில இலக்கிய (English Literature) நூல்கள் (இ) சிங்களம்: சிங்கள S.S.C. வகுப்புக்குரிய சிங்கள இலக்கிய நூல்கள். (ஈ) தருக்கம் தருக்க சங்கிரகம் அன்னம்பட்டீயம். (உ) செய்யுளியற்றல்: பாவும் பாவினமும். (ஊ) சமயம் i. சைவ சமயம்: 1, சிவஞானபோதச் சிற்றுரை 2. வழாக் திருமுறை. 3. திருவாசகம்: அகவல்கள் (மறைமலையடிகள் உரையுடன்) அல்லது ii. கிறீஸ்த சமயம்: (a) கத்தோலிக்ககிறீஸ்தசமயம்* அல்லது (b) ஏனைய கிறீஸ்தசமயம்* அல்லது iii. இஸ்லாம் சமயம்*

* இவற்றிற்குரிய விரிவான திட்டம் விரைவில் வெளியிடப்படும்.

## திருச்சி ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி சனி செப்ரெம்பர் 29**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 வி ராமாமிர்தம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 வாத்ய கோஷ்டி* 2 தமிழில் செய்தி 2 10 சித்ரகானம்* 2 45 முடிவு.

மாலை 5 30 காரைக்குடி வி எ கமலா 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 பி எஸ் வேதாசலம் பாட்டு திருச்சி பாலசுப்ராயுலு வயலின் எஸ் வி எஸ் நாராயணன் மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 ஆங்கிலப் பேச்சு ஒலிப்பதிவு 9 30 கோவிந்தராவ் டண்தாலே ஒலிப்பதிவு 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு செப் 30**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி ஒலிப்பதிவு 8 ஆங்கிலத்தில்செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 சித்ரகானம்* 12 30 சூர்யகாந்தி கதம்ப நிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 நாகஸ்வர இசை* 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 ஞாலவகை* 2 தமிழில் செய்தி 2 10 பெண்ணுலகம் 2 30 செண்டு இசை நிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 டி ஆர் கிருஷ்ணமாச்சாரி வீணை 5 45 மாயூரம் கே ராமசாமி பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 புதிய வெளியீடுகள்* 7 45 ரேடியோஅறிமுகம் 8 பி மலையப்ப சாஸ்திரி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 டி ஆர் கிருஷ்ணமாச்சாரி வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் அக்டோபர் 1**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 திருவிசநல்லூர் ஆர் சுப்ரமணியம் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவ.

12 30 ஆரம்பப்பள்ளிகளுக்கு 1 நீங்கள் கேட்டவை* 1 40 ஹிந்தியில்செய்தி 1 50 என் கேசி புல்லாங்குழல்* 2 தமிழில் செய்தி 2 10 நாட்டிய சங்கீதம்* 2 15 உயர்தர பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 4 ஆரம்பப்பள்ளிகளுக்கு 4 30 முடிவு.

5 30 கண்டதேவி எஸ் அழகர்சாமி வயலின் 5 45 இசைப் பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்ய கோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 முன்னேற்றம் ஒலிச்சித்திரம் 7 45 மீன் பிடித்தல் பி. வி. நித்யானந்தம் —பேச்சு 8 கண்டதேவி எஸ் அழகர்சாமி வயலின் 8 30 பி எல் சரஸ்வதி* 8 45 ஆங்கிலத்தில் பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 திருவிசநல்லூர் ஆர் சுப்ரமணியம் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் அக் 2**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 காந்தி பிறந்தநாள் இசை நிகழ்ச்சி 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 அமரன் காந்தி* 8 30 முடிவு.

12 30 சத்யஜோதி நினைவு நிகழ்ச்சி 1 மணிமலர் 1 30 பெண்ணுலகம் 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 எம் எஸ் சுப்புலக்ஷ்மி* 2 தமிழில் செய்தி 2 10 ஸ்ரீரங்கம் ஆர் ரங்கநாதன் பாட்டு 3 முடிவு.

மாலை 5 30 பாலம் ராமமூர்த்தி பாட்டு 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 பஜனை* 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 ஐந்து வருஷத் திட்டம் ஜி ராமானுஜம் —பேச்சு 7 45 மதுரை மணிஐயர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 குன்றத்தின்மீது சிறுகதை 9 30 கே. பி. சுந்தராம்பாள் பாட்டு ஆர் கே வெங்கடராம சாஸ்திரி வயலின் கல்யாத்தி ஆ ராமநாதன் மிருதங்கம் திருவில்வாமலை எஸ் விஸ்வநாத்ரி ஐயர் கடம் 10 முடிவு.

## காதலர்கள் சிக்கியமைக்குக் காரணம்

இற்றைக்குச் சில நாட்களின் முன் ஒரு நாள், ஒப்பநாயக புகையிரத ஸ்தானத்திற் புகையிரதப் பிரயாணச் சீட்டுப் பரிசோதகர் ஒரு வாலிபனையும் அவனுடனிருந்த ஒரு யுவதியையும், அவ்விருவரும் பிரயாணச் சீட்டின்றிப்பயணம்பண்ணினர்களென்ற குற்றத்தின் பேரில் புகையிரதத்தினின்றும் இறக்கினர்; அந்தப் புகையிரத ஸ்தானத்திற்குரிய உத்தியோகத்தர் அவர்களுக்கு மாறாகக் கொழும்பு நீதிதலத்தில் வழக்குத் தொடர விசாரணை நடந்தபோது, பின்வரும் இரகசியம் வெளிவரலாயிற்று; கொம்பனித் தெருவில் வசிக்கும் சசிதின் என்னும் வாலிபன்; மருதானை மதிய கலாசாலையிற் படிக்கும் சித்திறஹிமா என்னும் மாணவிமீது காதல் கொள்ள இவர்களுடைய காதல் பரஸ்பரம் நாளடைவில் முற்றியது: இந்த செப்டெம்பர் மீ 3-உ குறித்த கலாசாலைக்குப் படிக்கச் சென்ற சித்திரகிமா மீண்டு தன் வீட்டிற்குப் போகாது, சங்கேதப்படி சசிதினுடன் கூடிக்கொண்டு போய்விட்டாள்; அவளுடைய பெற்றோர் அவளைப் பள்ளிக்கூடத்திலும் வேறு பல இடங்களிலுந் தேடியுங் கண்டிலர்; அதன் பின்பே ஒப்பநாயகப் புகையிரத ஸ்தானத்திற் பிரயாணச் சீட்டில்லாமையினுல் அகப்படுத்தப்பட்டனர். விசாரணைபோது நீதிபதி 200 ரூபா பிணையில் மூன்று வருடத்திற்கு நன்னடத்தைக்குக் கட்டுப்படுத்தித் தீர்ப்புச் செய்தார்; காதலிருவரும் இப்பொழுது முறைப்படி விவாகஞ் செய்து கொண்டார்களாம்.


## விளம்பரம்

### ரேடியோ சிலோன் நிலைய வாத்யக் கோஷ்டி

ரேடியோ சிலோனில் அமைக்கப்படவிருக்கும் நிலைய வாத்யக் கோஷ்டியில் சேர்வதற்கு அனுபவம் வாய்ந்த இசைக் கலைஞர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வாத்யக்கோஷ்டித் தலைவர், வயலின், சிதார், தபேலா, சரோட், தில்ருபா, எஸ்ராஜ், கிளாரினெட், வீணை, மிருதங்கம், கோட்டுவாத்யம், புல்லாங்குழல், ஜலதரங்கம், தம்புரா, மற்றும் - தபேலா தவிர்ந்த - தாளவாத்யங்கள் வாசிக்க வல்லவர்கள்.

தாரதரங்கள், உத்தியோகம் சம்பந்தமாக முழு விபரங்களையும், ஒலிபரப்பு இலாகா தலைவர், ரேடியோ சிலோன், கொழும்பு 7, என்ற விலாசத்துக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

1951-ம் வருடம் அக்டோபர் மாதம் 5-ந் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டும்.

-ஒப்பம்- பி. தோண்டன்.
ஒலிபரப்பு இலாகா அதிகாரிக்காக.
ஒலிபரப்பு இலாகா,
கொழும்பு.
14 - 9 - 51.
G 32 25, 28—9—51.


## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்

[1949-ம் ஆூ ஆனி மீ 28 ந் திகதி முதல் 1950-ம ஆூ ஆடி மீ 31 ந் திகதிமுடியவுள்ளகாலத்து]

### வரவு செலவுக் கணக்கு

| செலவு | ரூ | ச | வரவு | ரூ | ச |
|---|---|---|---|---|---|
| தொழிலாளர் சம்பளம் | 6539 | 60 | கோவிற்கடைக்குத்தகை | 1308 | 00 |
| நவராத்திரிபூசை | 1153 | 04 | முடிக்குத்தகை | 85 | 00 |
| திருவெம்பாவைப்பூசை | 312 | 62 | கந்தசஷ்டிபூசை | 103 | 49 |
| விசேஷபூசை | 3089 | 20 | மாதாந்தஅருச்சனைக்கட்டளை | 44 | 00 |
| தினசரிப்பூசை | 2222 | 51 | கந்திக்குத்தண்ணீர்வார்த்தல் | 42 | 49 |
| திருவிழா | 12382 | 48 | அடிமைச்சாதனம் | 210 | 00 |
| காகிதாதி, அச்சுவேலை | 779 | 90 | திருவிழா | 21,663 | 05 |
| கோவிற்கட்டடத்திருத்தம் | 1729 | 35 | சகஸ்திரநாமார்ச்சனை | 2412 | 00 |
| வழக்குச்செலவு | 4144 | 78 | மூலஸ்தானச்சாத்து | 1654 | 35 |
| பலவினச்செலவு | 1593 | 60 | அபிஷேகம் | 244 | 86 |
| | | | பூசை | 6041 | 25 |
| | | | மதாந்தக்காணிக்கை | 7962 | 97 |
| | | | தென்னந்தோட்டம் | 718 | 20 |
| | 33948 | 08 | வாக்காளர்கட்டணம் | 360 | 00 |
| | | | நயினாதீவு - நெல்வயல் | 25 | 50 |
| செலவுநீக்கிவந்த(இருப்பு) | 9017 | 41 | புங்குடுதீவு - நெல்வயல் | 64 | 33 |
| | 42965 | 49 | யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத் தெருக் கிட்டங்கி — | 25 | 00 |
| | | | | 42965 | 49 |

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் 1950ம் ஆூ ஆடி மீ 31 ம் திகதியிலுள்ள திட்டக் கணக்கு

| | ரூ | ச | | | | ரூ | ச |
|---|---|---|---|---|---|---|---|
| க. நா. அ. கோவில் | 48,611 | 50 | தளபாடம் | | | 10265 | 10 |
| நெற்குத்தகை | | | திருவாபரணம் | | | 7297 | 75 |
| மு. சங்கரப்பிள்ளை | 460 | 00 | இருப்பு: | | | | |
| செலவுநீக்கி இருப்பு | 9017 | 41 | வெள்ளி | 6958 | 15 | | |
| | 58,088 | 91 | பொன் | 1958 | 51 | | |
| | | | பசுமாடு | 155 | 70 | | |
| | | | நெல் | 815 | 15 | 9887 | 51 |
| | | | வாகனம் | 3880 | 00 | | |
| | | | கைதிருத்தம் | 904 | 75 | 4784 | 75 |
| | | | (Suspence) | | | 3 | 00 |
| | | | சேமப்புஅப்பீல்வழக்கு (D. C. 5644) | | | 200 | 00 |
| | | | V. A. துரையப்பா | | | 700 | 00 |
| | | | காசு:— கச்சேரியில் (14151 D. C. யில் கட்டப்பட்டுள்ளது) | | | | |
| | | | கையிருப்பு | 16,668,61 / 8,282,19 | | 24950 | 80 |
| | | | | | | 58,088. | 91 |

பரிசோதிக்கப்பட்டதில் யாவும் சரியாயிருந்தன.

M. செல்வரத்தினம்
பகிரங்க எக்கவுண்டனும் ஓடிற்றரும்
யாழ்ப்பாணம்
16-2-1951.

தர்மகர்த்தாசபை.

M. 100 28—9—51.

## "கோகினூர்"


கோகினூர் எனப்படும் வைரரத்தினம் பூர்வத்தில், பஞ்சபாண்டவருளொருவனாகிய அர்ச்சுன ராசனுடைய முடியில் விளங்கியதென்பது ஐதிகம். இது உலகத்திலுள்ள இரத்தினங்களெல்லாவற்றுள்ளும் பெரியதாம்; இதன் காலம் 5000 ஆண்டுகட்கு மேற்பட்டதாகும்; இது பின்னர் இந்திய அரசர்கள் கிரீடங்களில் விளங்கி அவர்கள் வலி குன்றிய காலத்திலே மௌலாய (இஸ்லாமிய) அரசர்கள் கைப்பட்டு தெல்லி (இந்தியப் பிரஸ்த) நகரிலிருந்தது; நதிர்ஷா வென்னும் பாரசீக அரசன் இந்தியாவிற்குப் படையெடுத்துவந்து வெற்றியுற்ற காலத்தில் இந்தப் புராதன இரத்தினம் அவன்வசமானது. மொகாய சக்கரவர்த்திகள்வசம் இது இருந்த காலத்தில் இதன் நிறை ஆயிரம் "கறந்"ஆயிருந்ததாம்; இதற்கு நதிர்ஷாவே "கோகினூர்" அதாவது "ஒளிக்குன்று" என்னும் இந்தி மொழிப் பெயரையிட்டான்; இவன் இறந்த பின்பு இவ்விரத்தினம் பழையபடி இந்திய அரசர் வசமானது; அதன் பின்னர் கிழக்கிந்திய வியாபார சமுதாயத்தார் எனனும் பெயரோடு பிருத்தானியர் வந்து இந்தியாவைக் கைப்பற்றிய காலத்தில் இந்த விலையுயர்ந்த இரத்தினம் அவர்வசமாக, அவர்கள் 1862-ம் ஆண்டில், மங்காப்புகழ் பெற்ற பிருத்தானிய சக்கரவர்த்தினியாகிய விக்ரோரியாவிற்குச் சன்மானமாகக் கொடுக்க, இது அந்த அரசியின் கிரீடத்திற் பிரதான இரத்தினமாக விளங்கியது. இப்பொழுது இது எலிசபெத் ராணியின் கிரீடத்தில் விளங்குகிறது; இந்த ரத்தினத்தில் அபூர்வமான சில குணங்களுண்டெனச் சொல்லப்படுகிறது; இப்பொழுது இதன் நிறை ஆயிரமல்லவாம், 108 கறற்றும்; இந்த இரத்தினம் ஆர் வசம் போயடைகிறதோ அவர்களுக்கு இந்திய ராச்சியமுஞ் சித்திக்குமாம்; அப்படிச் சித்தித்தாலும் அணிபவருக்குக் கேடுண்டாம்; ஆனால் பெண்ணரசிகள் தங்கள் கிரீடத்தில் இதனைப் பதித்தணிந்தால் அவர்களுக்கு நன்மையேயன்றிக் கேடொன்றுமில்லையாம்.

## பிரிவுபசாரம்

மீசாலை தென்கிழக்கு, கமலாம்பிகை வித்தியாசாலையில் 14 வருடகாலம் சேவைபுரிந்த திரு இ. வேலுப்பிள்ளை ஆசிரியருக்கு அவ்வூர் பெற்றோர் ஆசிரியர் மாணவர்களால் ஓர் சிறந்த உபசாரணை அளிக்கப்பட்டது. அத் தருணம், உபசாரப் பாக்கள் பாடப்பட்டன. விருந்து வைபவம், புகைப்படம் ஆகியவற்றின்பின் மேற்படி ஆசிரியரின் சேவை நலத்தைப்பற்றிப் பல ஆசிரியர்கள் பாராட்டிப் பேசினார்கள். உத்தரமாக திரு வேலுப்பிள்ளை ஆசிரியர் நன்றி கூறினர்.

—அடிந.

L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE



தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

## சாலாமிஷ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கைகால்வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். தேகபுஷ்டி, வஜீாம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருருத்தல் விலை ரூபாய் 25.00, அரைருத்தல் விலை ரூபாய் 12-50
காலருத்தல் விலைரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

### சிவஞான பற்பொடி

சிவஞான பற்பொடியினால் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் ஆணி கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை
எமதுவிலாசம் நி 3/1 தட்டாதெரு
M 92 கோட்டைமுனை, மட்டக்களப்பு

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
134,3670
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.
மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு
கைசந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.
இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49 சிறுப்பர்.

வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

## திறமான தேக்கமரங்கள்

பல திணிசுகளிலும் வந்திருக்கின்றன
தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
74 ஆஸ்பத்திரி ரோட்
Std 2 யாழ்ப்பாணம்

Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Friday September 28, 1951

கடிதம்

## திருக்கோணமலை விக்கிரகங்கள்

சைவ சமூகத்திற்கு விலை மதிக்கொணாதசெல்வங்களாகிய இவ்விக்கிரகங்கள் "யாழ்ப்பாணம் முதலிய பல ஊர்களுக்கும் திக்விஜயஞ்செய்த பின் திருக்கோணமலையிற்பிரதிஷ்டை செய்யப்படும்" என "வீரகேசரி" பத்திரிகையில் வெளிவந்த செய்தியொன்று கூறுகிறது.

தயவு செய்து ஒரு சிலரின் மனத்திலே தோன்றும் சந்தேகத்தை, இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ள பிரமுகர்களை நிவர்த்திக்கும்படி வேண்டுகிறேன். யாதெனில், இப்பொழுது கிடைத்துள்ள மூன்று மூர்த்திகளும் என்னென்ன மூர்த்தங்களுள்ளன என்பதைப் பூரண ஆராய்சசி செய்து நிச்சயிக்கப்பட்டதா? சோமாஸ்கந்த சந்திரசேகர மூர்த்தங்களாகின், தேவி ஸ்கந்த மூர்த்தி ஆகிய இரு விக்கிரகங்களுமின்றிப் பிரதிஷ்டை செய்வதா? அன்றேல் இவ்விரு விக்கிரகங்களுக்கும் பதிலாக வேறு இரு நூதன விக்கிரகங்களைச் சேர்த்துப் பிரதிஷ்டை செய்வதா? அங்ஙனம் செய்வதாயின் பழைய இரு விக்கிரகங்களையும் புதைபொருள் ஆராய்ச்சியாளரைக்கொண்டு தேடுவித்து கிடைக்காதெனக் கண்டபின்பன்றோ பிரதிஷ்டையைப்பற்றியோசித்தல்முறையாகும். இவ்விக்கிரகங்கள் முனீஸ்வரதேவாலயத்தில் சில தினங்கள் வைக்கப்பட வேண்டுமெனச் சிலர் விரும்பியபோது அத்தேவஸ்தானக் குருக்கள் இவ் விக்கிரகங்கள் சாஸ்திரோக்தமான கிரியைகள் செய்யக்கூடிய நிலையிலில்லையென மறுத்ததாக ஓர் வதந்தியுண்டு. யாழ்ப்பாணத்திலுள்ள வேதாகமசைவசித்தாந்தசபையார் இவ்விஷயத்தைப்பிட்டுச் சிந்தித்து முடிவு காண்பார்களா?

விடத்தல் தீவு இங்ஙனம்
19-9-51. இ. வீராசித்தப்பி

## துர்க்கை அம்மன் கோவில் திருப்பணி

இலங்கையில் புராதனமானதும், ஒரே ஒரு ஆலயமுமாயுள்ள தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் மிகவும் பழுதடைந்து, இருப்பதால், அவசியம் திருத்திக் கட்டவேண்டும். மேற்படி கோவிற் பரிபாலனத்துக்கு டக்ரர். S. சுப்பிரமணியம் (Retired P.S. அக்கிராசனராயும், திரு.C.வன்னியசிங்கம் (M.P. அத்துவக்காத்து) தனாதிகாரியாயும், திரு. N. சங்கரப்பிள்ளை B A. உபதலைவராயும், திரு. V. சுப்பிரமணியம்(உபாத்தியாயர்) காரியதரிசியாயும் 11 பேர் கொண்ட சபையார் பொறுப்பேற்றிருக்கிறார்கள். கோவில் கட்டி முடிக்க ரூபா 4000/= மதிப்பு இருக்கிறது.

ஆலயத் தொண்டர்கள் ஏனையோர் பண உதவி செய்யுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

இங்ஙனம்
வ. சுப்பிரமணியம்
காரியதரிசி.
துர்க்கை அம்மன் கோவில்,
14-9-51.
M. 99 25, 28—9—51.

இலங்கையின் மிகப் பெரிய
— நகை —
வியாபாரிகள்
=O=
தந்தி: "JEWELLERS"
போன்: 161.
விலாசம்:
63, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.